தினமலர்

29-01-26

# 4524 மாணவ - மாணவிகளுக்கு 2 வது கட்டமாக மடிக்கணினிகள்

## ★48 மணி நேரத்தில் வழங்க கலெக்டர் அறிவுறுத்தல்

**நாகர்கோவில், ஜன.29–**

குமரி மாவட்டத்தில் 2வது கட்டமாக 4524 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் அந்தந்த கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றை 48 மணி நேரத்தில் வழங்க வேண்டும் என கலெக்டர் அழகுமீனா அறிவுறுத்தி உள்ளார்.



குமரி மாவட்டம், மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் மடிக்கணினிகளை கலெக்டர் அழகுமீனா, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

குமரி மாவட்டம், மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின்கீழ் வரப்பெற்ற மடிக்கணினிகளை கலெக்டர் அழகுமீனா, நேற்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:–

### உலகம் உங்கள் கையில்

மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, "உலகம் உங்கள் கையில்" என்ற திட்டத்தின் கீழ் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், விவசாயம், சட்டம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்துறைப் பயிற்சி போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த 10 லட்சம் மாணவ, மாணவியருக்கு முதற்கட்டமாக மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை முதல்வர் ஸ்டாலின் கடந்த 5ம் தேதி சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் துவக்கி வைத்தார். அதனடிப்படையில் குமரி மாவட்டத்திற்கு உட்பட்ட 12 அரசு கல்லூரிகள் மற்றும் 17 அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் 2,182 மாணவர்களுக்கு முதற்கட்டமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 4524 மாணவ, மாணவிகள்

அதன் தொடர்ச்சியாக 15 அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு குறிப்பாக நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் பயிலும் 695 மாணவ, மாணவியர்களுக்கும், நாகர்கோவில் தெ.தி. இந்து கல்லூரியில் பயிலும் 708 மாணவ, மாணவிகளுக்கும், அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியில் பயிலும் 269 மாணவ, மாணவிகளுக்கும், ஆரால்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரியில் பயிலும் 231 மாணவ, மாணவிகளுக்கும், நாகர்கோவில் பயோனியர் குமாரசாமி கல்லூரியில் பயிலும் 157 மாணவ, மாணவிகளுக்கும், நெய்யூர் லெட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 216 மாணவ, மாணவிகளுக்கும், தூத்தூர் புனித ஜூட்ஸ் கல்லூரியில் பயிலும் 165 மாணவ, மாணவிகளுக்கும், சுங்காங்கடை ஐயப்பா பெண்கள் கல்லூரியில் பயிலும் 198 மாணவ, மாணவிகளுக்கும், நிர்மலா கல்வி நிறுவனத்தில் பயிலும் 93 மாணவ, மாணவிகளுக்கும், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ சுயநிதி கல்லூரியில் பயிலும் 525 மாணவ, மாணவிகளுக்கும், காமராஜ் தொழில்நுட்ப கல்லூரியில் பயிலும் 175 மாணவ, மாணவிகளுக்கும், நாகர்கோவில் புனித சிலுவை சுயநிதி கல்லூரியில் பயிலும் 433 மாணவ மாணவிகளுக்கும், குழித்துறை ஸ்ரீ குமாரி பெண்கள் கல்லூரியில் பயிலும் 232 மாணவ, மாணவிகளுக்கும், நாகர்கோவில் பெண்கள் கிறிஸ்தவ கல்லூரியில் பயிலும் 427 மாணவ, மாணவிகளுக்கும் என மொத்தம் 4524 மாணவ மாணவிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தந்த கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 48 மணி நேரத்தில் வழங்கவேண்டும்

கல்லூரி முதல்வர்கள், தாளாளர்கள், இம்மடிக்கணினிகளை அமைச்சர், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் அந்தந்த பகுதி உள்ளாட்சி பிரதிநிதிகள் மூலமாக வழங்கவேண்டும். மடிக்கணினிகள் கிடைக்கப்பெற்ற 48 மணி நேரத்திற்குள் மாணவர்களுக்கு வழங்கவேண்டுமென அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள கல்லூரிகளை சார்ந்த மாணவ, மாணவியர்கள் தங்களுக்கான மடிக்கணினிகளை இரண்டு தினங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டுமென கலெக்டர் அழகுமீனா கேட்டுக்கொண்டார்.